தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்.

# தீர்க்கதரிசன வார்த்தைகள்

# நாவு

Family Blessing



மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்தில் இருக்கும் (நீதி 18:21)

## குடும்ப ஆசீர்வாதத்திற்க்கான சிறப்பிதழ்

நாவினால் ஏற்படும் ஆசீர்வாத தடைகள் எவைகள் என்பதனை அறிய

**தவறாமல் வாசியுங்கள்**

E-magazine

Prophetic Words Ministries

NO: 15

## கிறிஸ்துவுக்குள் நீதிமான்களே..

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தீர்க்கதரிசன வார்த்தைகள் ஊழியங்கள் சார்பாக இந்த E-Magazine -ஐ வாசிக்கின்ற உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தருடைய மகா கிருபையால் கடந்த முறை வாலிபர்களுக்கான சிறப்பிதழ் இந்த ஊழியங்கள் சார்பாக வெளியிடப்பட்டது. அது அநேகருக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. சிலர் சாட்சிகளை எங்களுக்கு தெரியப்படுத்தினார்கள். அநேகர் எங்களுக்கும் செய்திகளை தொடர்ந்து அனுப்புங்கள் என்று ஊழியத்துடன் தங்களை இணைத்துக்கொண்டார்கள். அவர்களை தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக. நீங்கள் சென்ற முறை வந்த வாலிபர்களுக்கான E-Magazine -ஐ வாசிக்கவில்லையென்றால் வாசியுங்கள். தேவாதி தேவன் உங்களை ஆசீர்வதிப்பது உறுதி.

இந்த ஊழியத்தினை ஜெபத்தால் தாங்குகின்ற அனைவருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். தேவன் தாமே உங்களை பரத்திலிருந்து ஆசீர்வதிப்பாராக.

இந்த இதழ் குடும்ப ஆசீர்வாதத்திற்க்கான சிறப்பிதழ் ஆகும். **சத்தியத்தினை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான்8:32 )** என்ற வேத வசனத்தின் படி, ஜெபத்துடன் ஆவியானவர் கற்றுக்கொடுத்த சத்தியத்தினை வாசித்து அறிந்து கொள்ளுங்கள். கண்டிப்பாக மெய்யான விடுதலையைப் பெற்றுக்கொண்டு, தடைப்பட்ட குடும்ப ஆசீர்வாதத்தினை பெற்றுக்கொள்வீர்கள். ஆமென்.

**கர்த்தராகிய இயேசுவே எங்கள் இராஜாதி இராஜா**

# நாவு

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். அகில உலகத்தையும் ஆளுகை செய்கின்ற நம் தேவன் ஆசீர்வதிக்கின்றவர். தேவனுடைய பிள்ளைகள் சகல ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றார். (எண்ணாகமம்24 1) ஆனால் தேவனுடைய பிள்ளைகளின் உண்மையான வாழ்வில் ஆசீர்வாதம் என்பது இல்லை. வெறும் ஆசீர்வாதம் என்ற வார்த்தையை மாத்திரமே கேட்கின்றனர்.

இதுவரை தேவனுடைய கரத்திலிருந்து ஒரு ஆசீர்வாதத்தைக் கூட பெற்றுக்கொள்ளாத தேவனுடைய பிள்ளைகள் எத்தனையோ பேர் இன்றைக்கும் உள்ளனர். அவர்களின் குடும்ப வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில், சபையில், உறவினர்கள் மத்தியில் 'தலை"யாக இருக்க வேண்டிய அவர்கள் "வாலா"கவே இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட பிள்ளைகள் தேவனுடைய கரத்திலிருந்து ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும்? என்பதை இத்தீர்க்கதரிசன செய்தியின் மூலம் தியானிக்கப் போகின்றோம் ஜெபத்துடன் இதை வாசியுங்கள் ஆவியானவர் உங்களுடன் இடைப்படுவாராக ஆமென்.

**நீதிமொழிகள் 18:21**

**மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்தில் இருக்கும்**

மனித சரீரத்தில் காணப்படும் சிறிய அவயம் நாவு. அதில் தான் மரணமும் உள்ளது, ஜீவனும் உள்ளது என்று சத்திய வேதம் கூறுகின்றது. நல்லது, கெட்டது, நன்மை, தீமை ஒரே இடத்தில்

இருக்கும்போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இது அவசியமானது. ஏனென்றால், நல்லது பயன்படுத்தினால் பிரச்சனை இல்லை. ஆனால் கெட்டதை பயன்படுத்தும் போது பிரச்சனை ஏற்படுகின்றது. அதே போல் தான் நாவில் இருக்கும் ஜீவனைப் பயன்படுத்தினால் சந்தோஷம், சமாதானம், மகிழ்ச்சி, ஆசீர்வாதம், செழிப்பு போன்ற நன்மைகள் கிடைக்கும். ஆனால், அதற்கு எதிர்மாறாக மரணத்தை பயன்படுத்தும் போது சமாதானக் குலைச்சல், வறுமை, கடன் பிரச்சனை, குழப்பம், தரித்திரம் போன்ற ஆசீர்வாதத் தடைகள் ஏற்படும்.

இன்றைய கால கட்டத்தில் தேவனுடைய பிள்ளைகள் வேத இரகசியத்தை அறிந்து கொள்ளாமல் இருக்கின்றனர். அதனால் நாவில் இருக்கும் மரணத்தைப் பயன்படுத்தி, அதன் பலனை தங்கள் வாழ்க்கையில் அனுபவிக்கின்றார்கள். ஆசீர்வாதத்தையும் இழந்து போகின்றார்கள். நாவை பயன்படுத்த தெரியவில்லை என்றால் எப்படி ஆசீர்வாதத்தை தடை செய்யும் என்பதை இச்செய்தியின் வழியாக தியானிப்போம்.

## நாவைக் குறித்து சத்திய வேதம் கூறுவது.




1. **நெருப்பு** **(யாக்கோபு** 3 :6 )
2. **சிறிய அவயம்** **(யாக்கோபு** 3:5)
3. **தீட்டப்பட்ட சவரகன் கத்தி (சங்கீதம்** 52:2)
4. **கருக்கான பட்டயம்** **(சங்கீதம்** 57:4)
5. **சர்ப்பத்தின் நாவு** **(சங்கீதம்** 140:3)
6. **கூர்மையாக்கப்பட்ட அம்பு** **(எரேமியா** 9:8)
7. **அநீதி நிறைந்த உலகம்** **(யாக்கோபு** 3:6)

8. அடங்காத பொல்லாங்குள்ளது (யாக்கோபு 3:8)

9.சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது (யாக்கோபு 3:8)

10.ஜீவவிருட்சம் ( நீதிமொழிகள் 15:4)

11. ஔஷதம் ( நீதிமொழிகள் 12:8)

12.சுத்த வெள்ளி ( நீதிமொழிகள் 10:20)

என்று நாவைக் குறித்தும் அதின் தன்மையைக் குறித்தும் சத்திய வேதம் இவ்வாறு கூறுகின்றது.

## நாவின் பயன்கள்

நாவின் பயன்பாடுகள் மிக மிக அதிகமாக உள்ளது. ஆவிக்குரிய வாழ்க்கையிலும், உலக வாழ்க்கையிலும் அதின் பயன்பாடுகள் மிக அதிகம். தேவனோடு தொடர்புக்கொள்ள நாவைத்தான் பயன்படுத்துகின்றோம். மனிதனோடு தொடர்புக்கொள்ள நாவைத்தான் பயன்படுத்துகின்றோம். குடும்பத்தில் ஒருவர் மற்றவர்களுடன் பேசாமல் இருந்தால் அன்னியோன்ய ஐக்கியம் ஏற்படாது. நாவு இல்லையென்றால் நிர்வாகமும் நடக்காது. அரசியல் பண்ணவும் முடியாது., இப்படி நாவு பல வழிகளில் பயன்படுகின்றது. இப்படிப்பட்ட நாவின் பயன்பாடுகளை இரண்டாகப் பிரிக்கலாம்.

1 ஜீவனுக்கேதுவான பயன்பாடு

2 மரணத்துக்கேதுவான பயன்பாடு

இந்த பயன்பாடுகளைக் குறித்து நாம் விரிவாக தியானிப்போம்.

இந்த தீர்க்கதரிசன செய்தி இப்பொழுது FACE BOOK -லும் வருகின்றது. அதை பெற தீர்க்கதரிசன வார்த்தைகள் என்ற முகநூல் பக்கத்தினை பாருங்கள்.

## ஜீவனுக்கேதுவான பயன்பாடு:

### 1.ஜெபித்தல்

சர்வ வல்லமையுள்ள உலகத்தை ஆளுகின்ற இராஜாவாகிய நம் தேவனிடம் விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் சொல்லுகின்றோம். அவரும் அதை ஆவலாய் கேட்டு பதில் தருகின்றார். இதற்கு நாவைத்தான் பயன்படுத்துகின்றோம்.

### 2.துதித்தல்

துதிகளில் வாசம்பண்ணுகின்ற நம் தேவன் துதிகளில் மிகவும் பிரியப்படுகின்றவர். மனிதர்களை உருவாக்கியது அவர் துதியைச் சொல்லி வருவதற்காகதான். அவரை துதித்துப் பாட நாவு தான் பயன்படுகின்றது (ஏசாயா 43: 21)

### 3.ஆசீர்வதித்தல்

குடும்ப உறுப்பினர்களையும், சபை விசுவாசிகளையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஆசீர்வதிக்கின்றோம். இதற்கும் நாவுதான் பயன்படுகின்றது.

### 4.அன்னியபாஷை பேசுதல்

நம் நாவை பயன்படுத்திதான் பற்பல பாஷைகளைப் பேசி தேவனைத்துதிக்கின்றோம், தேவனோடு இரகசியங்களைப் பேசுகின்றோம். (1கொரிந்தியர் 14.2)

### 5. பிசாசை துரத்துதல்

நாவில் உள்ள அதிகாரத்தைக் கொண்டு வார்த்தைகள் மூலமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிசாசை துரத்துகின்றோம் அதுவும் செல்கின்றது.

**தீர்க்கதரிசன வார்த்தைகள் ஊழியங்களை பற்றி அறிந்து கொள்ளவும் ஆலோசனைகளுக்கும் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.**

### 6.விசுவாசத்தை அறிக்கையிடுதல்

நாவைக் கொண்டுதான் தேவன் மேல் உள்ள விசுவாச பிரமாணத்தை அறிக்கையிடுகின்றோம் (ரோமர் 10:9)

### 7.பாவ அறிக்கை செய்தல்

தேவனுக்கு விரோதமாகவும், மனிதர்களுக்கு விரோதமாகவும் பாவங்களை செய்யும் போது, நாவைக் கொண்டுதான் பாவ அறிக்கை செய்து பாவத்தை மன்னிக்கும்படி ஜெபம் பண்ணுகின்றோம் (1யோவான் 1.9)

### 8. அர்ப்பணித்தல்

வாழ்ந்தாலும் உம்மோடுதான், மரித்தாலும் உம்மோடுதான் என்று நாவைக் கொண்டுதான் தேவ சமூகத்தில் அர்ப்பணிக்கின்றோம். (ரோமர் 12:1)

### 9. பொருத்தனை செய்தல்

நாவைக் கொண்டுதான் ஒரு பொருத்தனை செய்து தேவனுக்கும் நமக்கும் உடன்படிக்கையை ஏற்படுத்துகின்றோம்.

### 10. சாட்சி சொல்லுதல்

தேவன் நமக்கு செய்த நன்மைகளை கர்த்தருடைய சபையில் சாட்சியாக சொல்லுகின்றோம். தேவனும் நாம் சொல்லும் சாட்சியை அங்கீகரிக்கின்றார்.

### 11.பிரசங்கம், உபதேசம்

நாவைக் கொண்டுதான் பிரசங்கம், உபதேசம் செய்து கர்த்தருடைய வார்த்தைகளை ஊழியக்காரர்கள் அறிவிக்கின்றார்கள்.

### .12. கடிந்து கொள்ளுதல்

நாவைப் பயன்படுத்தி தான் மற்றவர்கள், விசுவாசிகள் , குடும்ப பிள்ளைகள் , பாவம் செய்யும் போது கடிந்துக் கொள்கின்றோம்

### .13.மன்னிப்புக் கேட்டல்

நாவைக் கொண்டுதான் மனிதர்களுக்கு விரோதமாக பாவம் செய்யும் போது மன்னிப்பு கேட்கின்றோம்.

### 14. வரங்கள் கிரியை செய்தல்

ஆவிக்குரிய வரங்கள் 5 வரங்கள் நாவினால் தான் கிரியை செய்கின்றது.

### 15. அன்பாக பேசுதல்

குழந்தைகள், குடும்ப உறுப்பினர்களிடம், கணவன், மனைவியிடம் நாவைக் கொண்டுதான் அன்பாக பேசுகின்றோம், இப்படி நாவு பல விதங்களில் ஜீவனுக்கேதுவாக பயன்படுகின்றது.


## தீர்கதரிசன செய்தியை WHATS APP-ல் பெற

**இந்த செய்தியை WHATS APP மூலமாகவும் பெறலாம். தினந்தோறும் தீர்க்கதரிசன வாக்குத்தத்த வசனங்கள், தீர்க்கதரிசன தியானங்கள், தீர்க்கதரிசன துணுக்குகள் மற்றும் E-magazine ஆவியானவரின் வழிநடத்துதலின் படி தீர்க்கதரிசன வார்த்தைகள் WHATS APP குரூப் மூலமாக அனுப்புகின்றோம். ஆண்களுக்கும்,பெண்களுக்கும் தனிதனி குரூப்கள் உள்ளன. சிலர் குரூப்பில் சேர்க்காமல் தனியாகவும் அனுப்ப சொல்வார்கள் அவர்களுக்கும் அனுப்பபடுகின்றது. இன்னும் சிலர் E-magazine மட்டும் அனுப்பச் சொல்வார்கள் அவர்களுக்கும் அனுப்புகின்றோம்.**

**நீங்களும் இந்த செய்தியை WHATS APP மூலமாகவும் பெறலாம். எங்கள் குரூப்பில் இணைக்கவேண்டும் என்றால் SEND LINK என்று TYPE செய்து 8608096748 என்ற WHATS APP எண்ணிற்கு அனுப்பவும். ஒரு REQUEST FORM LINK அனுப்பப்படும். அதை OPEN செய்து REQUEST FORM -ஐ FILL பண்ணுங்கள். பின்பு எங்களுடன் இணைக்கப்பட்டு உங்களுக்கு தீர்க்கதரிசன செய்திகள் அனுப்பப்படும்.**

## மரணத்திற்கேதுவான பயன்பாடு

ஜீவனுக்கேதுவான பல பயன்பாடுகள் கொண்ட நாவை பல பேர் பயன்படுத்த தெரியாமல் மரணத்திற்கேதுவாக பயன்படுத்துகின்றனர். இது அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் அழிவுக்கு நேராக நடத்துகின்றது. அவர்களுடைய ஆசீர்வாதத்தையும் தடை செய்கின்றது. எவ்வாறு நாவு குடும்ப ஆசீர்வாதத்தை தடைசெய்கின்றது என்பதை தொடர்ந்து தியானிப்போம்.

### 1.பொய் பேசுதல்

**பொய் பேசுகின்றவர்களை அழிப்பீர் (சங்கீதம் 5.6)**

**பொய்களை பேசுகிறவன் நாசமடைவான் ( நீதிமொழிகள் 19.9)**

**பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பு ( நீதிமொழிகள் 12.22)**

பொய் பேசுதலைக் குறித்து சத்திய வேதம் கூறும் வசனங்கள் இவை. நாவைக் கொண்டு பொய்களை பேசும்போது அவை மனிதனுக்கு சாபமாக மாறுகின்றது. மனிதர்களை ஆசீர்வதிக்கின்ற சத்திய வேதம்தான் பொய் பேசும் போது நாசமடைவான் என்றும், தேவன் அழிப்பார் என்றும் கடிந்துக் கொள்கின்றது.

> அருவருப்பான இடத்தில் நல்ல பொருட்கள் இருந்தால் யாரும் எடுக்க மாட்டார்கள். கழிவு நீர் கால்வாயில் நல்ல சாப்பாடு பார்சல் கிடந்தால் யாரும் எடுப்பார்களா?

பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள். அருவருப்பான இடத்தில் நல்ல பொருட்கள் இருந்தால் யாரும் எடுக்க மாட்டார்கள். கழிவு நீர் கால்வாயில் நல்ல சாப்பாடு பார்சல் கிடந்தால் யாரும் எடுப்பார்களா? ஒரு வேளை சாப்பாடு பார்சல் நன்றாக இருக்கலாம், அது இருக்கின்ற இடம் சரியில்லை.

அது அருவருப்பான இடம். எனவே அதில் கிடக்கும் பொருளும் அருவருப்பாகின்றது.

அதேபோலத்தான் நம் தேவனுக்கு ஜெபம், துதித்தல் போன்றவை மிக பிரியம் ஆனால் பொய்களை பேசும் போது, நம் உதடு அவருக்கு அருவருப்பாகின்றது. எனவே, அருவருப்பான இடத்தில் இருந்து வரும் துதி, ஆராதனை, ஜெபம் அவருக்கு அருவருப்பாக மாறுகின்றது. அதனால் ஜெபமும், துதியும் அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தேவனுடைய பிள்ளைகள் பலர் என் குடும்பத்தை ஆசீர்வதியும் என்றும், என்னையும் என் குடும்பத்தையும் ஆசீர்வதித்தாலொழிய உம்மை போக விட மாட்டேன் என்றும் பல மாதங்களாக, பல வருடங்களாக ஜெபிக்கின்றார்கள்.

**நீ தேவனிடத்தில் போராடி ஜெபிக்கும் காரியத்தில், தேவன் உன்னை ஆசீர்வதிக்க விரும்புகின்றார்.**

ஆனால், இடை இடையே சின்ன சின்ன பொய்களை பேசுவதால், தேவனுடைய பார்வையில் ஜெபமும் அருவருப்பாக மாறுகின்றது. ஆசீர்வாதமும் கிடைத்தபாடில்லை. இதை வாசிக்கின்ற தேவ பிள்ளையே! நீ தேவனிடத்தில் போராடி ஜெபிக்கும் காரியத்தில், தேவன் உன்னை ஆசீர்வதிக்க விரும்புகின்றார். அவர் எப்பொழுதோ ஆசீர்வதிக்க ஆயத்தமாகிவிட்டார். ஆனால், உன் வாயிலிருந்து வரும் சின்ன சின்ன பொய் தேவன் உன் ஜெபத்தைக் கேட்டு ஆசீர்வதிக்க கூடாதபடிக்கு தடை செய்கின்றது. எனவே, தேவ சமூகத்தில் ஆராய்ந்து பார்த்து அறிக்கையிடு தேவன் உன்னை ஆசீர்வதிப்பார்.

**வேதத்தின் ஆழ்ந்த இரகசியங்கள் உள்ளடக்கிய செய்திகள் E-magazine வடிவில் இன்னும் அதிகமாக வர உள்ளது. இதற்காக தொடர்ந்து ஜெபித்து கொள்ளுங்கள்.**

இன்றைய நவீன காலங்களில் நூதனமாக மற்றவர்களிடம் பொய் சொல்கின்றார்கள். குறிப்பாக வாலிபர்கள். எப்படியெனில், இன்றைய காலக் கட்டத்தில் சமூக வலைத்தளங்கள் (Whats app , Facebook ) மூலமாக மற்றவர்களுடன் Chat பண்ணுகின்றார்கள். அதுதான் அவர்களை அடிமைப்படுத்தியுள்ளது. இதில் தங்களைப் பற்றி உண்மையான காரியங்களை மறைத்து, தன் ஆசையை நிறைவேற்ற மற்றவர்களிடம், அதுவும் முகம் தெரியாதவர்களிடம் பொய்களை பேசி Chat பண்ணுகின்றார்கள். இப்படி செய்வது பொய் பேசுவதற்கு சமம்தான். இதுவும் ஆசீர்வாதத்தை தடை செய்யும்.



CHATING செய்தாலே அது ஆசீர்வாதத்தை தடை செய்யும் அதிலும் பொய்யை பேசும் போது இன்னும் தடை செய்யும். இதை வாசிக்கின்ற தேவ பிள்ளையே உன்னிடத்தில் எந்தவகையிலாவது பொய் உள்ளதா? என்று ஆராய்ந்து பார்த்து ஒப்புக்கொடு தேவன் உன்னை ஆசீர்வதிப்பார்.

**உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.**

## குற்றவாளி என்று தீர்த்தல் மற்றும் நியாயம் தீர்த்தல்

**மத்தேயு 7.1**

**நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள்.**

மற்றவர்களுக்காக ஜெபிக்கின்றோமோ இல்லையோ ஆனால் தவறாமல் மற்றவர்களை குறை சொல்லி, குற்றவாளி என்று நியாயம் தீர்க்கின்றோம். சகோதரன் தன் உடன் பிறந்த சகோதரனை குற்றவாளி என்று தீர்க்கின்றான். விசுவாசி ஊழியக்காரனை நியாயம் தீர்க்கின்றான். மனைவி-கணவனை நியாயம் தீர்க்கின்றாள். கணவன் மனைவியை நியாயம் தீர்க்கின்றான்.

**ஒருவன் எப்பொழுது மற்றவர்களை குற்றவாளி என்று நியாயம் தீர்க்கின்றானோ அல்லது குற்றம் சாட்டுகின்றானோ அப்பொழுதே அவன் பிசாசின் Agent ஆக மாறுகின்றான்.** ஏனெனில், குற்றம் சாட்டுதல் பிசாசின் வேலையாகும், அவன் தேவனுக்கு முன்பாக தேவனுடைய பிள்ளைகள் மேல் குற்றம் சுமரும்படி குற்றம்சாட்டுகின்றான் என்று சத்திய வேதம் கூறுகின்றது (வெளிப்படுத்துதல் 12.10)

பிசாசு குற்றம்சாட்டும் போது தேவனுக்கு கோபத்தை தான் கொண்டு வரும் தவிர பிசாசு குற்றம் சாட்டும் நபரை குற்றவாளி என்று எப்பொழுதும் நியாயம் தீர்க்க மாட்டார். அது போலதான் ஒரு மனிதன் மற்றவர்களை குற்றவாளி என்று குற்றம்சாட்டும் போது தேவன் குற்றம்சாட்டுகின்ற மனிதன் மேல் கோபப்படுவாரே தவிர குற்றம் சாட்டப்படுகின்றவனை குற்றவாளி என்று தீர்க்கமாட்டார். குற்றம் சாட்டுகின்றவனை தான் குற்றவாளி என்று தீர்ப்பார். யார் மீது குற்றம்சாட்டப்படுகின்றதோ அந்த நபரை விட்டுவிடுவார்.

**இந்த E-Magazine உங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தால் தேவனுடைய நாமம் மகிமைக்காக உங்கள் சாட்சிகளை facebook மற்றும் Whats App மூலமாக பதிவு செய்யுங்கள். கர்த்தராகிய தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.**

இன்றைய கிறிஸ்துவ வாழ்க்கையில் மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்த்ததினிமித்தம், தேவனால் குற்றவாளி என்று பலர் தீர்க்கப்பட்டுள்ளனர். இதினிமித்தம் அவர்கள் மேல் குற்றம் சுமந்ததினால் ஆசீர்வாதமும் தடைபட்டுள்ளது. இதை வாசிக்கின்ற தேவ பிள்ளையே வாழ்வில் ஆசீர்வாத தடைக்கு காரணம் என்னத் தெரியுமா ? மற்றவர்களை குற்றவாளி என்று தீர்க்கின்றாய், இதனால் உன் மீது குற்றம் சுமந்துள்ளது. எனவே தேவ சமூகத்தில் அறிக்கையிடு இனி யாரையும் நியாயந்தீர்க்க மாட்டேன் என்று தீர்மானம் எடு தேவன் உன்னை கனப்படுத்தி தடைபட்ட ஆசீர்வாதத்தை திரும்பத்தருவார்.

**ஒரு பாவமும் செய்யாமல் குற்றத்தை சுமக்க முடியும். எப்படியெனில் மற்றவர்களை குற்றவாளி என்று தீர்ப்பதினால்**

## சபித்தல்

**யாக்கோபு** 3.10

**துதித்தலும், சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகின்றது, என் சகோதரரே இப்படி இருக்கலாகாது**

நம் பிதாவாகிய தேவனைத் துதிக்கின்றோம் அதே நாவினால் அவருடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனிதனை சபிக்கின்றோம் என்று வேதம் கூறுகின்றது.

நம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணும் நாவினாலே, துதிக்கும் நாவினாலே தேவனுடைய பிள்ளைகளை சபிக்கும்போது தேவன் நம் ஜெபத்தைக் கேட்க முடியாது, அப்படிக் கேட்டால் பிசாசு நம் தேவனிடம் ஜெபத்தைக் கேட்டீர் அதேபோல் அவன் சொன்ன சாபத்தையும் கேட்டு அந்த மனிதனுக்கு சாபத்தைக் கொடும் என்று போராடுவான்.

இதனால் நம் தேவன் ஜெபத்தைக் கேட்க முடியாது. எனவே உங்கள் ஜெபம் கேட்டு ஆசீர்வதிக்க வேண்டும் என்றால், ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்றால் தேவ சமூகத்தில் ஆராய்ந்து பாருங்கள். யாரையாவது எரிச்சலினால் சபித்தால் அவர்களை ஆசீர்வதித்து ஜெபியுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

## கோள் சொல்லுதல்

**லேவி 19.16**

**உன் ஜனங்களுக்குள்ளே அங்கும் இங்கும் கோள் சொல்லி திரியாயாக பிறனுடைய இரத்தப்பழிக்கு உட்பட வேண்டாம்.**

மற்றவர்களை கொலை செய்தால் அவர்களுடைய இரத்தப்பழி நம்மேல் இருக்கும். கொலை செய்ய கத்தி, அரிவாள் போன்ற ஆயுதங்கள் வேண்டும். ஒரு ஆயுதமும் இல்லாமல், மற்றவர்களின் உயிரை எடுக்காமல் இரத்தப்பழி வரும் என்றால் கோள் சொல்வதின் மூலம் தான் வரும். ஒருவரிடம் கேட்கிறதை மற்றவரிடம் கூட்டிக் குறைத்து சொல்வது, ஒருவர் சொல்லாததை சொன்னதாக சொல்வது, ஒருவர் சொல்வதை அப்படியே மற்றவரிடம் அவர் இல்லாமல் சொல்வது கூட கோள் சொல்வதுதான். இப்படிப்பட்ட காரியங்கள் தேவனுடைய பிள்ளைகள் வாழ்க்கையில் காணப்படுமானால், ஆசீர்வாதத்தை தடை செய்யும்.

**தீர்க்கதரிசன வார்த்தைகள் ஊழியங்கள் மூலமாக வெளியிடப்படும் தீர்க்கதரிசன செய்திகள் அடங்கிய EMAGAZINE PDF மற்றும் JPEG வடிவில் அனுப்பபடுகின்றது. எனவே தவறாமல் வாசியுங்கள் எந்த FORMAT உங்களுக்கு SUPPORT பண்ணுகின்றதோ அதை நாங்கள் அனுப்புகின்றோம்.**

தேவனுடைய பிள்ளை யாரோ ஒருவனைக் குறித்தோ அல்லது ஒரு குடும்பத்தைக் குறித்து பேசியோ அவர்களுக்குள் பிரச்சனை வரும் என்றால், அதற்கு காரணம் அந்த தேவ பிள்ளைதான். அந்த தேவ பிள்ளையின் தலையின் மீது தான் அவர்களுடைய இரத்தப்பழி இருக்கும். அப்படி இரத்தப்பழி இருக்கும் ஒருவனை தேவன் எப்படி ஆசீர்வதிப்பார்? அப்படிப்பட்டவருடைய வாழ்க்கையில் தேவ ஆசீர்வாதம் தடைபடும்.

**ஒரு தாயாருக்கு பிறரைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவது அலாதி பிரியம். இதனால் சில குடும்பங்களை பிரித்துள்ளார்கள். கடைசியில் அந்த தாயரின் மகள் முதிர்கன்னியாக இருக்கின்றாள். தேவனிடத்திலிருந்து கிடைக்க வேண்டிய திருமண ஆசீர்வாதம் அத்தாயாரின் மகளுக்கு கிடைக்கவில்லை. கோள் சொன்னதினால்தான் ஆசீர்வாதம் தடைப்பட்டது என்று அத்தாயாருக்கு இன்னும் தெரியாது.** எனவே மற்றவர்களை குறித்து கோள் சொல்லாமல் இருப்போம். தேவன் நம் குடும்பத்தை ஆசீர்வதிப்பார்.

## கபட்டு வசனிப்பு

**சங் 34:12,13**

**நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்/ உன் நாவை பொல்லாப்புக்கும், உன் உதடுகளை கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.**

குடும்ப வாழ்க்கையில் நன்மை, மருத்துவ செலவு இல்லாமல் நல்ல ஜீவன், சமாதானமான நீடித்த நாட்கள் வேண்டும் என்றால் உதட்டை கபட்டு வசனிப்பிற்கு விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டுமென்று சத்திய வேதம் கூறுகின்றது.

கபட்டு வசனிப்பு என்றால் என்ன? என்று மனதில் ஒரு கேள்வி எழும்பலாம் இதைக் குறித்து எரேமியா 9.8 வசனம் தெளிவாக கூறுகின்றது. அவனவன் தன் தன் அயலானோடே சமாதானமாய்ப் பேசி அவனுக்கு தன் உள்ளத்தில் பதிவிடை வைப்பது தான் கபட்டு வசனிப்பாகும். ஒருவரை பார்க்கும் போது அவருடனே வார்த்தையினால் சமாதானமாகப் பேசுகின்றோம். ஆனால், இருதயத்தில் அவர்கள் மீது எரிச்சல், கோபம், பொறாமை, கசப்பு வைத்திருந்தால் அது கபட்டு வசனிப்பு. இது தேவனிடத்திலிருந்து கிடைக்கும் ஆசீர்வாதத்தை தடுக்கும். இப்படிப்பட்ட காரியங்கள் இருந்தால் சரி செய்வோம்.

பொய் பேசுதல் , குற்றவாளியாக மற்றவர்களைத் தீர்த்தல் , கோள் சொல்லுதல் , சபித்தல் , கபட்டு வசனிப்பு போன்ற காரியங்களுக்கு நாவை பயன்படுத்தும் போது நாவில் உள்ள அதிகாரங்கள் பிடுங்கப்படுகின்றன. எனவே ஆசீர்வாத தடை ஏற்படுகின்றது. . நாவின் அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றால் ஒவ்வொரு நாளும் நம் வாயின் வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாக இருந்து தேவ சமூகத்தில் ஆராய்ந்துப் பார்த்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்குள்ளாக கழுவ ஒப்புக்கொடுக்கும் போது, நாவின் அதிகாரம் பாதுகாக்கப்படும். இப்படிப்பட்டவர்கள் விரும்பிக் கேட்கும் காரியத்தை தேவன் செய்து அவர்கள் குடும்பத்தை ஆசீர்வதிப்பார். ஆமென்.

**இத்தீர்க்கதரிசன செய்தி உங்களுடன் பேசியிருந்தால் முதலில் பரலோக பிதாவுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் முழு மகிமையை செலுத்துங்கள். மகிமை மண்ணான மனிதனுக்கு அல்ல தேவனுக்கே. எனக்கு அல்ல கர்த்தருக்கே**